## 28.12 மாநில திட்டக் குழுவின் இரண்டாவது அறிக்கை – ஊரக வீட்டு வசதி பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள்

ஊரக வளர்ச்சி (சி 1) துறை

அரசாணை (நிலை) எண் 340 நாள் : 3.12.1997

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண்7 5 ஊரக வளர்ச்சி (சி1) துறை நாள் 14.8.97.
2. அரசு ஆணை (நிலை) எண் 220 ஊரக வளர்ச்சி (சி1) துறை நாள் 4.7.97.
3. அரசு ஆணை (நிலை) எண் 297 ஊரக வளர்ச்சி (சி1) துறை நாள் 29.9.97.

இந்திய அரசியலமைப்பின் 73–வது திருத்தச் சட்டத்திற்கு இணங்க உருவாக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளான ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு தேர்தல்கள் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பதவியேற்றுள்ளனர். மேற்கூறிய சட்டத்தின் பிரிவுக்கூறு 243 ஜி மற்றும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 257–க்கு இணங்க பெருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தவும் மற்றும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பட்டியல் IV–ல் உள்ள இனங்களைச் செயல்படுத்தவும் தேவையான பொறுப்புகளை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். ஆகவே எந்தெந்த பொறுப்புகளை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் என்பது குறித்து மாநிலத் திட்டக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறேமாநில திட்டக் குழு தனது இரண்டாவது அறிக்கையில் பிறவற்றோடு ஊரக வீட்டு வசதி தொடர்பான இனத்தின் மீது அரசுக்கு அறிக்கைகளை அனுப்பியுள்ளது.

2. மாநிலத் திட்டக் குழுவின் இரண்டாவது அறிக்கையில் மேற்சொன்ன ஊரக வீட்டு வசதி பற்றிய பரிந்துரைகளை, சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்து ஆய்வு செய்தது, ஆய்வுக்கு பின்னர், ஊரக வீட்டு வசதித் துறையின் குறித்த திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதிலும். கண்காணிப்பதிலும் ஊராட்சி அமைப்புகளுக்கு உரிய பொறுப்புகளை ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி இவ்வாணையின் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆணையிடப்படுகிறது.

3. பிற்சேர்க்கையில் கண்டுள்ள ஊரக வீட்டுவசதி திட்டங்களை செயல்படுத்தும் சம்மந்தப்பட்ட நிர்வாகத்துறைகள் தங்களின் கீழுள்ள ஒவ்வொரு நிலையிலும் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் அவைகளை ஒருங்கிணைக்கும் அலுவலர்கள் பற்றி விரிவாகக் குறிப்பிட்டு உடனே அறிவுரைகள் வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. இவ்வரசாணை, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலம் கால்நடை பராமரிப்பு மற்றும் கைத்தறி, கைவினைப் பொருட்கள் துணிநூல் மற்றும் கதர் ஆகிய துறைகளின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

## 28. DEVOLUTION OF POWERS

**பிற்சேர்க்கை**

**திட்டச் செயலாக்கம், மேற்பார்வை மற்றும் ஆய்வு தொடர்பான அதிகார ஒப்படைப்பு**

**(ஊரக வீட்டு வசதி)**

| தொடர் எண் | திட்டங்கள் / செயல் திட்டங்கள் | ஊராட்சி | ஊராட்சி ஒன்றியம் | மாவட்ட ஊராட்சி |
|---|---|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர்/பழங்குடியினர் ஆகியோருக்கான வீட்டு மனை ஒதுக்கீடு | உதவி செயவதற்குரியவர் களைக் கண்டறிதல் | உதவி செய்வதற்குரியவர்களைக் கண்டறிதல் பார்வையிடல் மேற் பார்வையிடல் | திட்டமிடுதல் ஆய்வு |
| 1A | பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கான வீட்டு மனை ஒதுக்கீடு | இல்லை | இல்லை | இல்லை |
| 2 | தமிழ்நாடு ஊரக வீட்டு வசதித் திட்டம் | உதவி செயவதற்குரியவர் களைக் கண்டறிதல் | பார்வையிடல் மேற்பார்வையிடல் ஆய்வு | திட்டமிடுதல் ஆய்வு |
| 3 | ஊரக பகுதிகளில் இருப்பிடத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் | உதவி செயவதற்குரியவர் களைக் கண்டறிதல் | பார்வையிடல் ஆய்வு மேற்பார்வையிடல் | திட்டமிடுதல் ஆய்வு |
| 4 | இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் | உதவி செயவதற்குரியவர் களைக் கண்டறிதல் செயல்படுத்துதல் | பார்வையிடல் ஆய்வு மேற்பார்வையிடல் | திட்டமிடுதல் மேற்பார்வையிடல் |
| 5 | ஆதிதிராவிவகுப்பினர் மற்றும் ஆதிதிராவிடர் பழங்குயினர் ஆகியோருக்கான வீட்டு வசதி திட்டம் | உதவி செயவதற்குரியவர் களைக் கண்டறிதல் செயல்படுத்துதல் | பார்வையிடல் ஆய்வு மேற்பார்வையிடல் | திட்டமிடுதல் ஆய்வு |
| 6 | பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கான வீட்டு வசதி திட்டம் | உதவி செயவதற்குரியவர் களைக் கண்டறிதல் செயல்படுத்துதல் | பார்வையிடல் ஆய்வு மேற்பார்வையிடல் | திட்டமிடுதல் ஆய்வு |
| 7 | மீனவர்களுக்கான வீட்டு வசதி திட்டம் | இல்லை | இல்லை | இல்லை |
| 8 | கைத்தறி நெசவாளர்களுக்கான வீட்டு வசதி திட்டம் | இல்லை | இல்லை | இல்லை |